


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வெள்ளி ❖ மே. 05, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 210 ❖ ரூ.10

### மஞ்சுவிரட்டில் உயிரிழந்த காவலரின் உடலைத் தூக்கிச் சென்ற எஸ்.பி

# நெகிழ்ச்சி

## காவல்துறை அணிவகுப்புடன் 30 துப்பாக்கி குண்டுகள் முழங்க உடல் தகனம்

## பாதுகாப்பு பணிக்குச் செல்லும் போலீசாருக்கு உரிய பாதுகாப்பு உபகரணங்கள் வழங்க கோரிக்கை





**அறந்தாங்கி , மே. 5–**

**புதுக்கோட்டை அருகே நடைபெற்ற மஞ்சுவிரட்டு போட்டியில் ஜல்லிக்கட்டு காளை குத்தி தூக்கியதில் காலமான காவலர் உடலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தூக்கிச் சென்ற சம்பவம் பொதுமக்கள் மத்தியில் நிகழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

ஜல்லிக்கட்டு,வடமாடு மஞ்சுவிரட்டு போல பாதுகாப்பாக ஒவ்வொரு காளையாக இல்லாமல் ஆங்காங்கே காளைகளை அவிழ்த்துவிடும் மஞ்சுவிரட்டால் பார்வையாளர்கள் முதல் பாதுகாவலர்கள் வரை பலர் பலியாகும் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதாக பலரும் குற்றம் சாட்டிவருகின்றனர். இந்த நிலையில் புதன்கிழமை கல்லூர் மஞ்சுவிரட்டில் பாதுகாப்பு பணியில் இருந்த நவநீதகிருஷ்ணன் என்ற போலீஸ்காரரும் சுப்பிரமணியன் என்ற பார்வையாளரும் காளைகள் முட்டியதில் பலியாகி உள்ளனர். 60க்கும் மேற்பட்டோர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் அடுத்த கல்லூர் கிராமத்தில் உள்ள அரியநாயகி மாரியம்மன் கோயில் மது எடுப்புத் திருவிழாவை முன்னிட்டு செம்முனிஸ்வரர் கோயில் வளாகத்தில் மஞ்சுவிரட்டு போட்டி நடந்தது. இதில் புதுக்கோட்டை, சிவகங்கை,ராமநாதபுரம், மதுரை, தஞ்சாவூர், திருச்சி உள்பட பல மாவட்டங்களில் இருந்தும் சுமார் 700க்கும் மேற்பட்ட காளைகள் பங்கேற்றன. புதுக்கோட்டை கோட்டாட்சியர் முருகேசன் மஞ்சுவிரட்டை தொடங்கி வைத்தார்.

தொடக்கத்தில் வரிசையாக அவிழ்க்கப்பட்ட காளைகள் பின்னர் ஆங்காங்கே காளைகளை அவிழ்த்துவிடத் தொடங்கியுள்ளனர். இதனால் ஏராளமான காளைகள் பார்வையாளர்கள் நிற்கும் பக்கங்களிலும் ஓடியது. வரிசையாக காளைகளை அவிழ்க்க வேண்டும் என்று அதிகாரிகள் சொல்லிக் கொண்டிருந்த நேரத்தில் கூட்டத்திற்குள் வேகமாக ஓடிய ஒரு காளையை பார்த்து இளைஞர்கள் அங்குமிங்குமாக ஓடிய நிலையில், பாதுகாப்பிற்காக நின்றிருந்த மீமிசல் காவல் நிலைய காவலர் நவநீதகிருஷ்ணன்(32) அந்த இடத்திலிருந்து தப்பி ஓட முயலும்போது வேகமாக வந்த காளை குத்திதூக்கிவீசியது.பலத்த காயமடைந்த காவலரை அங்கு நின்றவர்கள் மீட்டு முதலுதவிசெய்துதயாராக நின்ற ஆம்புலன்ஸ் மூலம் காரைக்குடி தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்

அறந்தாங்கி எல்.என். புரத்தைச் சேர்ந்தவர் நவநீதகிருஷ்ணன். இவரது மனைவி சபரி அறந்தாங்கி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவலராகப் பணி செய்கிறார். இருவரும் 2013ல் போலீஸ் வேலைக்கு வந்தவர்கள். இவர்களுக்கு மிதுன்சக்கரவர்த்தி (8), கீர்த்திவாசன் (5) என்ற இரு மகன்கள் உள்ளனர். பாதுகாப்பிற்குச் சென்ற காவலர், காளை முட்டி உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இளம் வயதிலேயே பணியிடத்தில் காளை முட்டி உயிரிழந்த போலீஸ்காரர் நவநீதகிருஷ்ணன் குடும்பத்திற்கு முதலமைச்சர் ரூ.20 லட்சம் நிவாரணம் வழங்கியுள்ளார்.

காளை முட்டி உயிரிழந்த போலீஸ்காரர் நவநீதகிருஷ்ணன் உடல் இன்று தகனம் செய்யப்பட்டது. முன்னதாக அவரது வீட்டிற்குச் சென்று அவரது மனைவி மற்றும் உறவினர்களுக்கு ஆறுதல் சொன்ன மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே, காவல்துறை அணிவகுப்பு மரியாதையுடன் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய பிறகு நவநீதகிருஷ்ணன் உடலைத் தானே முன்னின்று தூக்கிச் சென்றார். காவல்துறை அணிவகுப்புடன் 30 துப்பாக்கி குண்டுகள் முழங்க அதே பகுதியில் உள்ள மயானத்தில் உடல் தகனம் செய்யப்பட்டது. மாவட்ட எஸ்.பி, இறந்த காவலரின் உடலைத் தூக்கிச் சென்றதைப் பார்த்து உறவினர்கள் கதறி அழுதனர். பணியில் இருந்தபோது உயிரிழந்த போலீஸ்காரருக்கு ரூ.20 லட்சம் முதலமைச்சர் நிவாரணம் அறிவித்துள்ளது போதுமானதாக இல்லை. கூடுதல் நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரிக்கையும் வைத்துள்ளனர். மேலும் ஜல்லிக்கட்டு, வடமாடு மஞ்சுவிரட்டு, மஞ்சுவிரட்டு போன்ற நிகழ்ச்சிகளுக்கு உயிரைப் பணயம்வைத்துஆபத்தான பாதுகாப்பு பணிக்குச் செல்லும் போலீசாருக்கு உரிய பாதுகாப்பு உபகரணங்கள் வழங்க வேண்டும் என்கின்றனர் போலீசார்.



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு ஆரம்ப பள்ளிகளுக்கும் விரிவுப்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் அமுதா, பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் காகர்லா உஷா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் கன்சோங்கம் ஜடக் சிரு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வேட்புமனுவில் தவறான தகவல் இபிஎஸ் மீது வழக்குப் பதிவு ஐகோர்ட்டில் மத்திய குற்றப் பிரிவு தகவல்

**சென்னை, மே. 5–**

**வேட்புமனுவில் தவறான தகவல் தெரிவித்த விவகாரத்தில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக சேலம் மத்திய குற்றப்பிரிவு தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் எடப்பாடி தொகுதியில் எடப்பாடி பழனிசாமி போட்டியிட்டார். அவர், தனது வேட்புமனு மற்றும் பிரமாணப்பத்திரத்தில் சொத்து விவரம் உட்பட பல்வேறு முக்கிய தகவல்களை தவறாக தெரிவித்துள்ளார். எனவே அவர்மீது மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவிடக் கோரி, தேனி மாவட்டத்தைச் சேர்ந்த மிலானி என்பவர் சேலம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த சேலம் நீதிமன்றம், இந்த புகார் குறித்து விசாரணை நடத்தி, முகாந்திரம் இருந்தால் வழக்கு பதிவு செய்ய சேலம் மத்திய குற்றப்பிரிவு போலீஸாருக்கு உத்தரவிட்டது. மேலும் இந்த மனு குறித்து மே 26ம் தேதி அறிக்கை தாக்கல் செய்யவும் உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவுக்கு தடை விதிக்க கோரியும், உத்தரவை ரத்து செய்யக் கோரியும் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார்.

அந்த மனுவில், புகார்தாரர் மிலானி, தனது தொகுதியைச் சேர்ந்தவரோ, தேர்தலில் போட்டியிட்டவரோ அல்ல. எனது வேட்புமனுவில் எந்த தவறான தகவலும் தெரிவிக்கப்படவில்லை. எனவே இந்த புகார் விசாரணைக்கு உகந்ததல்ல. ஓராண்டு கால அவகாசத்துக்கு பிறகு இந்த புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதை கருத்தில் கொள்ளாமல் சேலம் நீதிமன்றம், விசாரணைக்கு உத்தரவிட்டது தவறு" என்று மனுவில் கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதி இளந்திரையன் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது காவல்துறை தரப்பில் "மே 26ம் தேதிக்குள் விசாரணை நடத்தி முடிக்க வேண்டுமென மாஜிஸ்திரேட் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின்படி, எடப்பாடி பழனிசாமி மீது சேலம் மத்திய குற்றப்பிரிவில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டது.

அப்போது எடப்பட்டி பழனிசாமி தரப்பில், "இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு, அவசர கதியில் தனக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, காவல்துறை தரப்பு விளக்கத்தை பதில்மனுவாக தாக்கல்செய்ய உத்தரவிட்டு, விசாரணையை ஜூன் 6ம் தேதிக்கு தள்ளிவைத்தார். அதுவரை இந்த விவகாரத்தைபெரிதுபடுத்த வேண்டாமென காவல்துறைக்கு நீதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

### பி.யு. சின்னப்பா

மற்ற நட்சத்திரங்கள்
மங்கிவிடும்...
அல்லது
உதிர்ந்து விடும்.

திரையுலகில்
இன்றும் இன்னும்
மின்னும்
உச்ச நட்சத்திரம்--
பி.யு.சின்னப்பா.

புதுக்கோட்டையிலிருந்து
புறப்பட்டுப்போய்
திரையுலகில்
காண்போர் வியக்கும்
கலைக்கோட்டை கட்டியவர்.

கட்டுமஸ்தான உடலழகும்
கணீரென்றக் குரலழகும்
காந்தம் தோற்கும்
விழியழகும்
கழுத்தில் புரளும் முடியழகும்
வேறெவரையும் விஞ்சிநிற்கும்
ஒரே நாயகன்.
இவர்
இன்றும் கூட
தேவதைகளின்
கனவில் உலவும்
கதாநாயகன்.

முதல் இரட்டை வேடம்,
ஒலிபெருக்கி தேவையில்லா
இசைக்கூடம்.
சிந்தை கவர்ந்த ஆணழகன்
இவர்
செல்வம் குவித்த பேரழகன்.

நாடகத்தின்
உயரம் தொட்டார்
ஆனால் நாற்பதிற்குள்
உயிரை விட்டார்.

புகழுச்சியில் நின்றார்
ஊதியமாய்
பல லட்சம் வென்றார்.

சூரியனைப்போல்
ஜொலித்தார்.
சொத்துக்கள்
பல குவித்தார்.

கலைத்தாயின்
சாதனைப் பிள்ளையாய்
ஆகிப்போனார்.

பின்
சோதனைச் சுழலில்
மூழ்கிப்போனார்.

கடைசியில்
ஒரு சொத்துமின்றி
காலத்தின் சொத்தாய்
மாறிப்போனார்.

**– தங்கம் மூர்த்தி**
**புதுக்கோட்டை**
**94431 26025**

## திமுக எம்.பி கனிமொழி வெற்றியை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு – உச்ச நீதிமன்றம் தள்ளுபடி

**புதுடெல்லி, மே. 5–**

தூத்துக்குடி மக்களவை உறுப்பினர் கனிமொழியின் வெற்றியை எதிர்த்து தொடரப்பட்ட தேர்தல் வழக்கை தள்ளுபடி செய்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



தூத்துக்குடி மக்களவை தொகுதி திமுக எம்.பி, கனிமொழியின் வெற்றியை எதிர்த்து, தொகுதி வாக்காளர்கள் சந்தானகுமார், முத்துராமலிங்கம் ஆகியோர் தேர்தல் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். வேட்புமனுவில் கணவரின் வருமானத்தை தெரிவிக்காததால், அவரின் வெற்றியை செல்லாது என அறிவிக்க வேண்டும் என மனுவில் கோரியிருந்தனர்.

சந்தானகுமார் தொடர்ந்த தேர்தல் வழக்கை நிராகரிக்க கோரி கனிமொழி தாக்கல் செய்த மனுவை சென்னை உயர் நீதிமன்ற தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. இந்த உத்தரவைஎதிர்த்துகனிமொழி உச்ச நீதிமன்றத்தில், மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார். இந்த மேல்முறையீட்டு மனு கடந்த 2020-ம் ஆண்டு ஜனவரி மாதம் விசாரணைக்கு வந்தபோது, சென்னை உயர் நீதிமன்றம் கடந்த 2019ம் ஆண்டு நவம்பர் 19ம் தேதி பிறப்பித்த தீர்ப்புக்கும், தேர்தல் மனு மீதான விசாரணைக்கும் இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது.

இந்த வழக்கின் இறுதி விசாரணையின் போது, மனுதாரர் தரப்பில், "வேட்பாளரின் கணவர் சிங்கப்பூர் அல்லது வேறு எந்த நாட்டில் வேலை செய்தாலும், மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் அடிப்படையில், அவரின் வருமானத்தை அறிய வாக்காளர்களுக்கு அனைத்து உரிமையும் உள்ளது. ஆனால் வேட்பாளர் அதை வழங்கத் தவறியுள்ளார்" என்று வாதிடப்பட்டிருந்தது.

அப்போது கனிமொழி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், "கேட்கப்பட்டுள்ள அனைத்து தரவுகளும் வேட்பு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 5 லட்சம் வாக்காளர்கள் நான் வேட்புமனுவில் தெரிவித்துள்ள தரவுகளின் அடிப்படையில் எனக்கு வாக்களித்துள்ளனர். எனவே தன் மீதான வழக்கு விசாரணையை தடை செய்ய வேண்டும்" என வாதிடப்பட்டிருந்தது. அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் வழக்கை தீர்ப்புக்காக ஒத்திவைத்திருந்தனர்.

இந்த மேல்முறையீட்டு வழக்கில் உச்ச நீதிமன்ற நீதிபதி அஜய் ரஸ்தொகி தலைமையிலான அமர்வு பிறப்பித்த தீர்ப்பில், கனிமொழியின் மேல்முறையீட்டு மனுவை ஏற்று, அவரது தேர்தல் வெற்றியை எதிர்த்து சந்தானகுமார் தொடர்ந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

## ரூ.1000–க்கு மேல் கரண்ட் பில்.. கவுண்டர் கிடையாது ஆன்லைனில் மட்டுமே செலுத்த மின்வாரியம் நடவடிக்கை

**சென்னை , மே. 5–**

தமிழ்நாட்டிற்கு மின்சேவை வழங்கும் தமிழ்நாடு மின்சார வாரியம் 2 மாதத்திற்கு ஒருமுறை மின் நுகர்வோரிடம் மின் கட்டணத்தை வசூல் செய்துவருகிறது. பொதுவாக இதற்கு முன்னர், ரூ.5,000 மேல் கட்டணம் செல்லும் நுகர்வோர்கள் ஆன்லைன் மூலமாகவோ அல்லது வங்கி வரவோலை எனப்படும் (டி.டி) அல்லது காசோலை மூலமாக மின்கட்டணம் செலுத்தும் நடைமுறை இருந்து வந்தது.

இதற்கு குறைவான கட்டணத்தை மின்வாரிய அலுவலகத்தில் உள்ள கவுண்டரில் நேரடியாக செலுத்த முடியும் என இருந்தது. இந்நிலையில், மின்வாரிய அலுவலகங்களில் பணிச்சுமையை குறைக்கும் விதமாக கவுண்டரில் செலுத்தும் அதிகபட்ச தொகை என்பது ரூ.5,000இல் இருந்து ரூ.2,000ஆக கடந்தாண்டு மாற்றப்பட்டது. இந்த தொகையை மேலும் குறைக்க மின்வாரியம் திட்டமிட்டுள்ளது.

இந்த மாற்றத்தை தமிழ்நாடு மின்சார வாரியம் மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் முன்மொழிந்துள்ளது. அதன்படி, அலுவலக கவுண்டரில் செலுத்தும்




அதிகப்பட்ச தொகை ரூ.1,000ஆக வைத்து அதற்கு மேல் உள்ள கட்டணங்களை ஆன்லைன் மூலமாகவோ, அல்லது வங்கிவரைவோலை, காசோலை போன்றவை மூலமாகவோ செலுத்த கோரப்பட்டுள்ளது. இதற்கு ஆணையம் அனுமதி தந்தாதல் அதிகப்பட்ச தொகை எனப்படும் ரூ.1,000 புதிய முறை நடைமுறைக்கு வரும்.

தற்போதைய கட்டண முறைப்படி, ஒரு வீட்டில் இரு மாதங்களில் மின் நுகர்வு 372 யூனிட்டுகளை தாண்டினால் கட்டணம் ரூ.1,000ஐ தாண்டிவிடும். இவர்கள் இனி மின்சார வாரிய அலுவலக கவுண்டரில் பணம் செலுத்த அனுமதிக்கப் படமாட்டார்கள் எனக் கூறப்படுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் வருவாயில் 74 சதவீத தொகை டிஜிட்டில் முறையில் வசூலிக்கப்படுவதாக மின்வாரியம் தெரிவித்துள்ளது. இந்த புதிய மாற்றத்தால் டிஜிட்டல் பரிவர்த்தனை மேலும் அதிகரிக்கும்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்









### "மல்யுத்த வீரர்கள் உடனான

# டெல்லி காவல்துறை மோதல் அவமானகரமானது நீதி தேவை" இரு மாநில முதல்வர்கள் கண்டனம்

டெல்லி, மே.5–

டெல்லி ஜந்தர் மந்தர் பகுதியில் - பாஜக எம்.பி.யும் இந்திய மல்யுத்த சம்மேளனத்தின் தலைவருமான பிரிஜ் சிங் மீது பாலியல் புகாரை முன்வைத்து மல்யுத்த வீராங்கனைகள் போராடி வருகின்றனர். இவர்களுக்கு பல்வேறு விளையாட்டு வீரர்களும் அரசியல் கட்சியினரும் ஆதரவு தெரிவித்துவரும் நிலையில், புதன்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வீரர்களுக்கு படுக்கைகளை வழங்க ஆம் ஆத்மி கட்சியை சேர்ந்தவர்கள் நேரில் சென்றனர்.

அப்போது பாதுகாப்பு பணியில் இருந்த டெல்லி காவல்துறையினர் அவர்ளை தடுத்து நிறுத்தினர். இதனால் அங்கு சற்று பதற்றமான சூழல் நிலவியது. இதில் ஒருகட்டத்தில் மல்யுத்த வீரர்கள் உடன் டெல்லி காவல்துறையினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். பின்பு வாக்குவாதம் தள்ளுமுள்ளாக மாறியது. இந்த தள்ளுமுள்ளின் இறுதியில் போராடிய வீராங்கனைகள் தாக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின. இது குறித்து அவர்களேவும் "நள்ளிரவு நடந்த அந்நிகழ்வில் காவலர்கள் எங்கள் மேலே கை வைத்து கீழே



தள்ளினர்" என கண்ணீருடன் செய்தியாளர்களிடம் பேசினர்.

இந்த வீடியோவை மேற்கோள் காட்டி தமிழ்நாடு முதல்வரும், டெல்லி முதல்வரும் நேற்று வேதனையும் கண்டனமும் தெரிவித்துள்ளனர். டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், "போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இந்திய மல்யுத்த வீரர்களுடனான டெல்லி காவல்துறையின் மோதல், வேதனை அளிக்கக்கூடியது மற்றும் அவமான கரமானதும்கூட" என்று தெரிவித்துள்ளார்

இது குறித்து டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் தன் ட்விட்டர் பக்கத்தில், "நாட்டின் சாம்பியன் வீரர்களிடம் இப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பது மிகவும் வேதனையானது மற்றும் அவமானகரமானது. பாஜக, ஆணவத்தால் மோசம் போய்விட்டது. ஒட்டுமொத்த அமைப்பையே கேலிக்கூத் தாக்கியுள்ளனர். நாட்டு மக்களுக்கு எனது வேண்டுகோள், பாஜகவின் இந்த போக்கை பொறுத்துக் கொள்ளாதீர்கள். பாஜகவை வேரோடு பிடுங்கி விரட்ட வேண்டிய தருணம் வந்துவிட்டது" என்று பதிவிட்டுள்ளார்.

அதேபோல் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது ட்விட்டர் பதிவில், "தங்கள் சாதனைகளால் நாட்டிற்கே பெருமை தேடித் தந்த நமது மற்போர் வீரர்களுக்கு இழைக்கப்பட்டு வரும் பெரும் அநீதியைக் கண்டு அதிர்ச்சி அடைகிறோம். இதை ஏற்றுக்கொள்ளவே முடியாது. பெண்களுக்கு அதிகாரமளிப்பதைப் பற்றி நமது பிரதமர் தொடர்ந்து பிரசங்கம் செய்கிறார். ஆனால் அவரது பொய் வாக்குறுதிகளுக்கு முரணாக, கத்துவா, உன்னாவ், ஹாத்ரஸ், பில்கிஸ் பானு எனப் பல வழக்குகளிலும் பாதிக்கப்பட்டோருக்குத் தொல்லையளிப்பதும், குற்றம்சாட்டப் பட்டோரைப் பாதுகாப்பதுமே பா.ஜ.க.வின் அடையாளமாக இருக்கிறது. நமது மற்போர் வீரர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்" என்று பதிவிட்டுள்ளார்.

# மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியில் மனிதக்கழிவு கலக்கப்பட்ட விவகாரம் மேலும் 10 பேருக்கு சிபிசிஐடி போலீசார் சம்மன்

புதுக்கோட்டை, மே.5–

புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் கிராமத்தில் அமைந்துள்ள குடிநீர் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியில் மனிதக்கழிவு கலக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக சிபிசிஐடி போலீசார் நேற்றுடன் 120 வது நாளாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதில் இதுவரையில் ஒன்பது போலீசார் உட்பட 153 பேரிடம் அவர்கள் விசாரணை நடத்தி சாட்சியம் பெற்றுள்ளனர்.

இதனிடையே சம்பவம் நடந்தபோது குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் எடுக்கப்பட்ட மனிதக்கழிவின் மாதிரி சென்னை தடயவியல் அறிவியல் ஆய்வகத்தில் சோதனை செய்யப்பட்டது. அப்போது அதில் மூன்று பேரின் மரபணு இருப்பது தெரியவந்தது. இதனால் இந்த வழக்கு தொடர்பாக விசாரணை நடத்தப்பட்ட வேங்கைவயல், இறையூர்




உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த 119 பேருக்கு ஒவ்வொரு கட்டமாக டிஎன்ஏ பரிசோதனை மேற்கொள்ள சிபிசிஐடி போலீஸார் திட்டமிட்டனர்.

அதன்படி டிஎன்ஏ பரிசோதனைக்கு வேங்கைவயல், இறையூர், முத்துக்காடு கிராமங்களை சேர்ந்த 11 நபர்களுக்கு சம்மன் அனுப்பப்பட்டிருந்த நிலையில் அதில் மூன்று நபர்கள் மட்டுமே ஆஜராகி ரத்த மாதிரி கொடுத்திருந்தனர். (ரத்த மாதிரி பரிசோதிப்பதென்பது, டிஎன்ஏ பரிசோதனையின் ஒருபகுதி) இந்நிலையில் அடுத்த கட்டமாக இறையூர் மற்றும் வேங்கைவயல் கிராமத்தைச் சேர்ந்த 10 நபர்களுக்கு டிஎன்ஏ பரிசோதனை எடுக்க வேண்டுமென்றும், அதற்கு அவர்கள் ரத்த மாதிரி கொடுப்பதற்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆஜராக வேண்டுமென்றும் சிபிசிஐடி போலீசார் அவர்களுக்கு சம்மன் கொடுத்துள்ளனர்.

கடந்த முறை ரத்த மாதிரி பரிசோதனை மேற்கொள்ள சிபிசிஐடி போலீசார் ஏற்பாடு செய்தபோது, 8 பேர் அதற்கு வரவில்லை. ஆகவே தற்போது அவர்களுக்கு மீண்டும் சம்மன் அனுப்பவும் சிபிசிஐடி போலீசார் திட்டமிட்டுள்ளனர். இந்த பரிசோதனை இன்று நடைபெறலாம் என்றும் சிபிசிஐடி போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு எடுத்து முடிக்கப்பட்டதும் அடுத்தடுத்த கட்டங்களாக 119 நபர்களுக்கும் முழுமையாக டிஎன்ஏ மாதிரி பரிசோதனை மேற்கொள்ளப்படும் எனவும் சிபிசிஐடி போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.








அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் தாலுக்கா, இடையக்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த ம.கல்யாணகுமார். ஏற்கனவே மதிமுக ஒன்றிய செயலாளராக செயல்பட்ட கல்யாணகுமார், தற்பொழுது நடைபெற்ற உட்கட்சித் தேர்தலில், மதிமுக அரியலூர் மாவட்ட துணைச் செயலாளராக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

# தென்காசி மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட அமில ஸ்பிரே அடித்து பழுக்க வைக்கப்பட்ட 500 கிலோ மாம்பழங்கள் பறிமுதல்!

தென்காசி, மே.5–

தென்காசி மாவட்டம் செங்கோட்டை அருகே உள்ள பிரானூர் பார்டர் பகுதியில் ஏராளமான மாம்பழங்கள் விற்பனை செய்யும் கடைகள் உள்ளன. உடன் மாம்பழங்களை ஏற்றுமதி செய்யும் குடோன்களும் உள்ளன. இங்கிருந்து டன் கணக்கிலான மாம்பழங்கள் அண்டை மாநிலங்களான கேரளா மற்றும் கர்நாடகாவுக்கும், தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், பிரானூர் பார்டர் பகுதியில் செயல்பட்டு வரும், மாரியப்பன் என்பவருக்கு சொந்தமான மாம்பழக் குடோனில் தடை செய்யப்பட்ட அமிலத்தை பயன்படுத்தி மாம்பழங்களை பழுக்க வைத்துள்ளதாகவும், இதனால் உடல் உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் உணவு பாதுகாப்புத்துறைக்கு சமீபத்தில் தகவல் கிடைத்துள்ளது. அதன் அடிப்படையில், உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் நேற்று அங்கு சோதனை செய்தனர். அதிகாரிகள்,



மாம்பழங்களை தண்ணீரில் போட்டு சோதனை செய்தனர்.

அப்பொழுது, மாம்பழங்கள் அனைத்தும் மிதக்கவே, அவற்றில் அமிலங்கள் அடிக்கப்பட்டிருந்தது உறுதியானது. அதனை தொடர்ந்து ஸ்ப்ரே அடிக்க வைக்கப்பட்டிருந்த பாட்டிலை கைப்பற்றினர். இதையடுத்து சுமார் 500 கிலோ மதிப்பிலான அமிலம் மூலம் பழுக்க வைக்கப்பட்டுள்ள மாம்பழங்களை மொத்தமாக பறிமுதல் செய்த உணவு பாதுகாப்புத் துறை அதிகாரி, அவற்றை செங்கோட்டை நகராட்சி குப்பை கிடங்கில் கொட்டி பினாயில் ஊற்றி அழித்தனர்.

மேலும், இது போன்ற அமிலம் கலந்த ஸ்பிரே அடித்து மாம்பழங்களை பழுக்க வைப்பவர்கள் மீதும், செயற்கை கற்களை பயன்படுத்தி மாம்பழங்களை பழுக்க வைப்பவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். மாம்பழ குடோன்கள் மற்றும் மாம்பழங்களை விற்பனை செய்யும் கடைகள் நடத்தி வருபவர்கள் கண்டிப்பாக உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகளிடம் லைசன்ஸ் பெற்ற பிறகு விற்பனையில் ஈடுபட வேண்டும் எனவும் உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

# தென்பெண்ணை விவகாரத்தில் "தேவைப்பட்டால் மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வோம்" துரைமுருகன்

வேலூர், மே.5–

வேலூர் மத்திய மாவட்ட திமுக அலுவலகத்தில் அவசர செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் எம்பி கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், கார்த்திகேயன், வில்வநாதன், அமுலு உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், "கட்சியில் ஒரு கோடி உறுப்பினர் சேர்க்கையை விரைந்து முடிக்க வேண்டும்; திமுக ஆட்சியின் 2 ஆண்டுகால சாதனை குறித்து அனைத்து பகுதி மக்களையும் சென்றடையும் வகையில் பொதுக் கூட்டங்கள் நடத்த வேண்டும்" என பேசினார்.

இதைத் தொடர்ந்து



செய்தியாளர்களை சந்தித்த அவர், "தென்பெண்ணை ஆற்றில் கர்நாடக அரசு அணை கட்டக் கூடாது என உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் வழக்குத் தொடர்ந்தோம். அப்போது உச்ச நீதிமன்றம், நீர் பங்கீடு தீர்ப்பாயம் அமைக்க மத்திய அரசுக்கு உத்தரவிட்டது. ஆனால், மத்திய அரசு அமைக்காததால் மீண்டும் உச்சநீதிமன்றம் சென்றோம். ஏன் அமைக்கவில்லை என கேட்டதற்கு விரைவில் அமைக்கிறோம் என்று சொல்லி வருகிறார்கள்.

இது இப்போது மட்டுமல்ல. காவிரியிலும் பல ஆண்டு காலம் இதை தான் மத்திய அரசு கையாண்டது. இந்த முறையும் அமைக்காவிட்டால் மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்கு இவ்விவகாரத்தை எடுத்துச் செல்வதை தவிர வேறு வழியில்லை. ஆனால், எப்படியும் நீர் பங்கீடு தீர்ப்பாயம் அமைக்கும் வரையில் விடமாட்டோம்" என்றார்.

தொடர்ந்து அவரிடம் 'தமிழகத்தில் திமுக அளித்த தேர்தல் வாக்குறுதிகளை, கர்நாடகாவில் காங்கிரஸ் அறிவித்து வருகிறதே அதை எப்படி பார்க்கிறீர்கள்?' என செய்தியாளர்கள் கேட்டதற்கு, 'எங்கள் திட்டத்தை கர்நாடகாவில் அறிவித்திருப்பது எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது' என்றார்.

### தென்காசி மாவட்டம் சொக்கம்பட்டியில்

# ஸ்ரீ சந்தன மாரியம்மன் திருக்கோவில் சித்திரை திருவிழா



தென்காசி, மே.5–

தென்காசி மாவட்டம் சொக்கம்பட்டியில் பாண்டியர் சமஸ்தானத்திற்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீ சந்தன மாரியம்மன் திருக்கோவில் சித்திரை திருவிழா நடக்கவிருக்கிறது.

இதை முன்னிட்டு அன்னதான நிகழ்ச்சியும் நடைபெற்றது, 20 நாட்கள் விரதம் இருந்து பூக்குழி இறங்கும் நிகழ்ச்சியும் நடைபெற இருக்கிறது, மேலும் சொக்கம்பட்டி மாமன்னர் அனந்த சுந்தர கருணாலய வலங்கை புலி பாண்டியன் ஜமீன்தாரின், திருவுருவ புகைப்படமும் ஊர் தலைவர்களால் திறந்து வைக்கப்பட்டது, 508 திருவிளக்கு பூஜை தேவர் இளைஞர் அணி சார்பாக நடைபெற்றது.

கரிவல வந்த நல்லூர் கோவிந்தராஜன் நையாண்டி மேளகலை குழுவினரின் மேளதாளத்துடன் அம்மனுக்கு தீர்த்த குடம், பால்குடம் 1000 க்கும் மேற்பட்டோர் ஊர்வலமாக சென்றனர். இதைத் தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு அபிஷேக, அலங்கார தீபாராதனையும் இரவு வில்லிசை நிகழ்ச்சியும் நடக்கவிருக்கிறது, நிகழ்ச்சியில் கரகாட்டமும் நடு இரவு ஸ்ரீ சந்தன மாரியம்மன் சப்பர வீதி உலா நிகழ்ச்சியும் நடைபெறும். இந்நிகழ்ச்சி சொக்கம்பட்டி பாண்டியர் சமஸ்தான விழா குழுவினர் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

### பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை சார்பில்

# சிறப்பு தூர்வாரும் பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் நேரில் ஆய்வு





புதுக்கோட்டை, மே.5–

புதுக்கோட்டை மாவட்டத்தில் பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் சிறப்பு தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருவதை, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநர் எஸ்.கணேஷ், , மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமுவுடன் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

புதுக்கோட்டை ஒன்றியம், முள்ளூர் ஊராட்சி, வாளியம்பட்டியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், ரூ.9.04 இலட்சம் மதிப்பீட்டில் குளம் தூர்வாரும் பணிகள் நடைபெறுவதையும், செம்பட்டிவிடுதி வட்டம், வாடிமனைப்பட்டியில் பொதுபணித்துறையின் சார்பில் வாய்க்கால் தூர்வாரும் பணிகளையும், அறந்தாங்கி வட்டம், ஆயிங்குடி கிராமத்தில் உள்ள செங்கலநீர் ஏரி வடிகால் வாய்க்கால் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரும் பணி நடைபெறுவதையும், மேலும் அக்னியாறு வடிநிலப்பகுதியில் நீர்வள ஆதாரத்துறையின் சார்பில், மருதங்குடி வடிகால் வாய்க்கால் ரூ.19 கோடி மதிப்பீட்டில் 1.5 கி.மீட்டர் தூரத்திற்கு நடைபெறுவதையும், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த சிறப்பு தூர்வாரும் பணிகளை தொடர்புடைய அலுவலர்கள் விரைவாகவும், நல்ல முறையிலும் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட கண்காணிப்பு அலுவலர் கணேஷ் கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வுகளின்போது, வருவாய் கோட்டாட்சியர்கள் முருகேசன், சொர்ணராஜ், செயற்பொறியாளர்கள் எஸ்.பாலகிருஷ்ணன், கனிமொழி, சி.திலீபன், உதவி செயற்பொறியாளர்கள் சண்முகம், பவளகண்ணன், ராஜராஜன், சண்முகவேல், நாராயணசாமி, இளங்கண்ணன், எஸ்.புஷ்பா, உதவிப் பொறியாளர்கள் இரா.செந்தில்குமார், எஸ்.பிரசன்னா, லதா, வட்டாட்சியர்கள் விஜயலெட்சுமி, பாலகிருஷ்ணன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# முதலமைச்சர் மாநில இளைஞர் விருது பெற தன்னார்வலர்களுக்கு புதுக்கோட்டை மவட்ட நிர்வாகம் அழைப்பு

புதுக்கோட்டை, மே.5–

புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் கவிதா ராமு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றும் இளைஞர்களது பணியை அங்கீகரிக்கும் பொருட்டு முதலமைச்சர் மாநில இளைஞர் விருது ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று 15 முதல் 35 வயது வரை உள்ள 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது ரூ.1,00,000/- ரொக்கம், பாராட்டு பத்திரம் மற்றும் பதக்கம் ஆகியவைகளை உள்ளடக்கியதாகும்.

2023ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருது எதிர்வரும் 15.8.2023 அன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் வழங்கப்பட உள்ளது. இவ்விருது தொடர்பாக கீழ்காணும் தகுதிகள் வரையறுக்கப் பட்டுள்ளன. 15 வயது முதல் 35 வயதுவரை உள்ள ஆண்/பெண் ஆகியோர் விண்ணப்பிக்கலாம். 01.04.2022 அன்று 15 வயது நிரம்பியவர்களாகவும், மார்ச் 31.03.2023 அன்று 35 வயதுக்குள்ளாகவும் இருத்தல் வேண்டும். கடந்த நிதியாண்டில் (2022-2023) அதாவது 01.04.2022 முதல் 31.03.2023 வரை மேற்கொள்ளப்பட்ட சேவைகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும்.

விருதுக்கு விண்ணப்பிக்கும் முன்பு குறைந்தபட்சம் 5 வருடங்கள் தமிழகத்தில் குடியிருந்தவராக இருத்தல் வேண்டும் (அதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்). விண்ணப்பதாரர்கள் சமுதாய நலனுக்காக தன்னார்வத்துடன் தொண்டாற்றி இருக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்து தொண்டு கண்டறியப் படக்கூடியதாகவும், அளவிடக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். மத்திய / மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் / கல்லூரிகள் / பள்ளிகளில் பணியற்றுபவர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பிக்க இயலாது. விண்ணப்பதாரருக்கு உள்ளூர் மக்களிடம் உள்ள செல்வாக்கை விருதுக்கான பரிசீலனையில் கணக்கில் கொள்ளப்படும்.

இணையதளம் மூலம் விண்ணப்பிக்க கடைசி நாள் 31.05.2023 அன்று மாலை 4 மணி ஆகும். இணையதளம் மூலம் விண்ணப்பித்தவுடன் அனைத்து விண்ணப்பதாரர்களும் தங்களுடைய சான்றிதழ்களை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் அலுவலரிடம் சான்றிதழ் சரிபார்ப்பதற்காக ஒப்படைக்க வேண்டும். எனவே மேற்கண்ட நிதியாண்டிற்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள தகுதியான நபர்கள் www.sdat.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பித்து பயன்பெறுமாறும், மேலும் விவரங்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் அலுவலர் அலைபேசி எண் 7401703498 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பனை மரங்களை வெட்டி தீ வைத்த தனியார் செங்கல் சேம்பரை கண்டித்து கிராம மக்கள் போராட்டம்




மயிலாடுதுறை, மே, 5 -
மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுகா பாகசாலை ஊராட்சிக்கு உட்பட்ட கண்டமங்கலம் கிராமத்தில் கிராம ஊராட்சிக்கு சொந்தமான 50 பனை மரங்களை வேருடன் பெயர்த்து அப்புறப்படுத்தி தீயிட்டு கொளுத்திய தனியார் செங்கல் சூளை நிர்வாகத்தை கண்டித்து பொதுமக்கள் போராட்டம் நடத்தினர்.

பாகசாலை ஊராட்சி, கண்டமங்கலம் கிராமத்தில் ஏசிஎஸ் என்ற தனியார் செங்கல் சேம்பர் கம்பெனி நடைபெற்று வருகிறது. களத்து புறம்போக்கை ஆக்கிரமித்து அரிசி ஆலை கட்டுவதாக ஊர் பொதுமக்கள் தெரிவித்து வருகின்றனர். அதற்காக, சேம்பர் நிறுவனத்தின் ஊழியர்கள் அங்கிருந்த காய்த்து கொப்பும், குலையுமாக தொங்கிக் கொண்டிருந்த 50-க்கும் மேற்பட்ட பனை மரங்களை வேரோடு பிடுங்கி அப்புறப்படுத்தி இரண்டு கிலோமீட்டர் தொலைவிற்கு கொண்டு சென்று தீ வைத்து எரித்துள்ளனர்.

இது தொடர்பாக கிராம மக்கள் சேம்பர் நிர்வாகத்தை சந்தித்து கேட்டதற்கு கொலை மிரட்டல் விடுத்து அனுப்பி உள்ளனர். இதனை அடுத்து கிராம மக்கள் சேம்பர் முன்பு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து இது தொடர்பாக பாகசாலை காவல் நிலையத்தில் புகார் தெரிவித்துள்ளனர்.

காவல் நிலையத்தில் இருந்து காவலர்கள் பொது மக்களை அழைத்து பேச்சு வார்த்தைக்கு வருமாறு தெரிவித்தனர். அதை தொடர்ந்து பொதுமக்கள், சேம்பர் உரிமையாளர்கள் காவல் நிலையத்தில் சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தனர். பேச்சுவார்த்தை சுமுகமாக முடியாததால் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரில் மனு அளித்தனர். கிராமத்துக்கு சொந்தமான களத்து புறம்போக்கை ஆக்கிரமித்து நிலத்தடி நீர் மற்றும் தமிழகத்தின் தேசிய மரமான பனை மரங்களை வெட்டி எரித்து சாம்பலாக்கும் செங்கல் சேம்பர் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்



காரைக்கால் மாவட்ட நிர்வாகம் மற்றும் கடலோர காவல் படை மற்றும் காவல்துறை, மீன்வளத்துறை சார்பாக காரைக்கால் மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை கட்டுப்படுத்துவது சம்பந்தமாகவும், முழுவதும் ஒழிப்பது சம்பந்தமாக ஆலோசனைக் கூட்டம் துணை மாவட்ட ஆட்சியர் (வருவாய்) ஜான்சன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் காவல் கண்காணிப்பாளர் (தெற்கு) சுப்ரமணியன் மற்றும் இந்திய கடலோர காவல் படை துணை கமாண்டன்ட், அபிஷேக் திரிவேதி மற்றும் வட்டாட்சியர் மதன்குமார் காவல் ஆய்வாளர் மர்த்தினி மற்றும் துணை இயக்குனர் மீன்வளத்துறை சவுந்திரபாண்டி உள்ளிட்டவர்கள் இந்த ஆய்வில் கலந்து கொண்டார்கள். இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கடல் வழியாகவும் மற்றும் பல்வேறு வகையிலும் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் வருவதை தடுப்பது சம்பந்தமாக ஆலோசனை நடைபெற்றது.

# வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து அமைச்சர் சந்திர பிரியங்கா அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம்



காரைக்கால், மே, 5 -
காரைக்கால் மாவட்டத்தில் அமைந்துள்ள நெடுங்காடு மற்றும் கோட்டுச்சேரி கொம்யூன் பகுதிக்குட்பட்ட ஆணையர்கள் மற்றும் அதிகாரிகளுடன் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து ஆலோசனை கூட்டம் போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையில் நடைபெற்றது.

கோடைகாலமாக இருப்பதால் குடிநீர் தட்டுப்பாடின்றி பொதுமக்களுக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்ட அமைச்சர் சாலைகளை மேம்படுத்துவது சம்பந்தமாகவும் அறிவுறுத்தினார்.

மேலும் இந்த இரு கொம்யூனில் உள்ள சமுதாய நலக்கூடங்களை செப்பனிடும் பணியில் ஈடுபடுமாறு கேட்டுக் கொண்டார். அனைத்து மயானங்களிலும் குடிநீர் இணைப்பு ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும் சட்டமன்ற உறுப்பினர் நிதியை குறித்த நேரத்தில் அதிகாரிகள் செலவிட வேண்டும் என்றும் அமைச்சர் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களிடம் அறிவுறுத்தினார்.

# பொதுமக்கள் அளித்த புகாருக்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் அதிரடி





காரைக்கால், மே, 5 -
காரைக்கால் மாவட்டம், நல்லாத்தூர் பகுதியில் சாலையில் அமைந்துள்ள வேகத்தடை காரணமாக வாகன ஓட்டிகளுக்கு தெரியாத நிலையில் விபத்து ஏற்படும் அபாயம் இருந்து வந்தது. இதை பொதுமக்கள் ஆட்சியருக்கு தகவல் தெரிவித்தனர்.

உடனடியாக மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் பொதுப்பணித்துறை அதிகாரிகள் மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து அதிகாரிகளிடம் சாலையில் வெள்ளை வர்ணம் பூசி நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவு பிறப்பித்தார். இந்த நிலையில் நேற்று காலை வர்ணம் பூசும் பணி அப்பகுதிகளில் உடனடியாக நடைபெற்றது.


இதேபோல் கடற்கரைச் சாலையில் நகராட்சிக்கு சொந்தமான பொதுமக்கள் பயன்படுத்தும் கழிப்பறையில் இருந்து வெளியேறும் கழிவுநீர் வெளியே தேங்கி நிற்பதால் அப்பகுதியில் அதிகமாக கூடும் பொதுமக்களுக்கு அசாதாரண சூழ்நிலை மற்றும் துர்நாற்றம் ஏற்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியருக்கு பொதுமக்கள் தகவல் தெரிவித்ததின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் உடனடியாக சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையரை அறிவுறுத்தியதின் பேரில் நகராட்சி நிர்வாகம் நேற்று அப்பணியை சீர் செய்து பொதுமக்களுக்கு எந்தவித இடையூறும் இல்லாமல் பணியினை செய்து முடித்தனர்.

இதுகுறித்து ஆட்சியர் குலோத்துங்கன் கூறுகையில், பொதுமக்கள் பொது இடங்களில் பயன்படுத்தும் இது போன்ற கழிப்பறைகளை சுத்தமாக வைத்திருக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

## அக்கா வீட்டிற்கு சென்ற மனைவியை

# உலக்கையால் அடித்து கொலை செய்த கணவன்: காவல் நிலையத்தில் சரண்

சென்னை, மே, 5 -
சென்னை திருவொற்றியூரில் வசித்து வரும் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரை சேர்ந்தவர் துரை (வயது 56), மதுரையை சேர்ந்த இந்திராணி (வயது 44). இவர்கள் இருவருக்கும் கடந்த 22 வருடத்திற்கு முன்பு திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு 21 வயதில் அனுப்பிரியா என்ற மகள் உள்ளார் .

பாத்திர கடையில் வேலைபார்த்துவந்ததுரை கடந்த 11 ஆண்டுகளாக வேலைக்கு செல்லாமல் வீட்டில்இருந்துவருகிறார். மனைவி இந்திராணி திருவொற்றியூர் தேரடி பகுதியில் பேக்கரியில் வேலை செய்து தனது மகள் அனுப்பிரியாவை கல்லூரியில் படிக்க வைத்து வருகிறார்.

இந்திராணியின் சகோதரி கஸ்தூரி பக்கத்து தெருவில் வசித்து வருகிறார். சகோதரி கஸ்தூரியை பார்க்க இந்திராணி அடிக்கடி சென்று வருவதால் கணவன் மனைவிக்கிடையேகடந்த சில நாட்களுக்கு முன்பு தகராறு ஏற்பட்டு உள்ளது.

கடந்த இரண்டு வாரங்களாக சகோதரி கஸ்தூரியை பார்க்க இந்திராணி செல்லவில்லை. நேற்று காலை சகோதரி கஸ்தூரியை பார்க்க இந்திராணி வீட்டிற்கு சென்றுள்ளார். கஸ்தூரியை பார்த்து பேசி விட்டு வெகு நேரம் கழித்து இந்திராணி வீட்டிற்கு வந்துள்ளார்.

எதற்கு நீ அக்கா வீட்டிற்கு சென்றாய் என்றுகேட்டு மனைவிடம் கேட்டு வாக்கு வாதத்தில் ஈடுபட்டார். இதனால் கணவன் மனைவிக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டு இந்திராணி நான் போலீசை கூப்பிட்டுவேன் என்று கூறியுள்ளார். உடனே துரை வீட்டில் இருந்த உலக்கையை எடுத்து வாய் மற்றும் முகத்தில் சரமாரியாக தாக்கியுள்ளார். தகவலறிந்து சகோதரி கஸ்தூரி ஓடி வந்து பார்க்கும்போது துரை படிக்கட்டு வழியாக இறங்கி வந்து இனி உங்கள் தங்கை உங்கள் வீட்டுக்கு வர மாட்டார் என கூறிவிட்டு சென்றுள்ளார். கஸ்தூரி வீட்டில் சென்று பார்த்தபோது இந்திராணி ரத்த வெள்ளத்தில் தலையில் அடிபட்டு கிடந்துள்ளார்.

இதுகுறித்து உடனே திருவொற்றியூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த திருவொற்றியூர் காவல் ஆய்வாளர் காதர் மீரான் தலைமையில் போலீசார் வந்து பார்த்தபோது இந்திராணி உயிரிழந்து கிடந்தது தெரிய வந்தது. போலீசார் வழக்கு பதிவு செய்து இந்திராணி உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மனைவியை கொலை செய்த கணவன் துரை திருவொற்றியூர் காவல் நிலையத்தில் சரணடைந்தார். இச்சம்பவம் குறித்து திருவொற்றியூர் காவல் ஆய்வாளர் காதர் மீரான் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றார்.

# புதுக்கோட்டை சாந்தநாத சுவாமி திருக்கோயிலில் பிரதோஷ விழா



புதுக்கோட்டை,மே.5-
புதுக்கோட்டை அருள்மிகு வேதநாயகி உடனுறை சாந்தநாத சுவாமிக்கு பால், தயிர், இளநீர், தேன், சந்தனம், மஞ்சள் நீர் திருநீர் உள்ளிட்ட 18 வகையான அபிஷேகங்கள் செய்யப்பட்டது.மாலையில், நந்திகேஸ்வரருக்கு பாலபிஷேகம், பன்னீர், தயிர், பஞ்சாமிர்தம், இளநீர் சந்தனம், மஞ்சள் நீர், திருநீர் உள்ளிட்ட பூஜை பொருள்களில் சிறப்பு அபிஷேகம் கலசாபிஷேகம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது, நந்திகேஸ்வரர் வெள்ளிக் கவசமலர் அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார், திரளான பக்தர்கள் வருகைதந்து சுவாமியை தரிசனம் செய்தனர்.

விழா ஏற்பாடுகளை பிரதோஷ வழிபாட்டு மன்ற அமைப்பாளர் மல்லிகாவெங்கட்ராமன், திருக்கோவில் நிர்வாகிகள் அரிமளம் ரவிசிவாச்சாரியார், மகேஷ் குருக்கள், கோயில் ஊழியர்கள் செய்திருந்தனர் மழையும் பொருட்படுத்தாமல் பக்தர்கள் வருகைதந்து சாமி தரிசனம் செய்தனர். இதைப் போல, புதுக்கோட்டை திருக்கோகர்ணம் கோகர்ணேஸ்வரர், நெடுங்குடி கைலாசநாதர் ஆலயம், திருவேங்கைவாசல், நற்சாந்துபட்டி, பனையபட்டி, வலையபட்டி ஆகிய சிவன் ஆலயங்களிலும், பொன்னமராவதி சோழீஸ்வரர் ஆலயம், வேந்தன்பட்டி அருள்மிகு நெய் நந்தீஸ்வரர், இலுப்பூர் பகுதியில் உள்ள சொர்ணாம்பிகை சமதே பொன்வாசிநாதர் வெள்ளாஞ்சார் மீனாட்சிசுந்தேரஸ்வரர், ராப்பூசல் தாயுமானவர், தாண்டீஸ்வரம் சத்குரு சம்ஹாரமூர்த்தி, இலுப்பூர் சொர்ணாம்பிகை சமேத பொன்வாசிநாதர் ஆலத்தூர் தர்மாம்பிகை சமேத அகத்தீஸ்வரர் மற்றும் இலுப்பூரை சுற்றியுள்ள பல்வேறு சிவன் கோயில்களில் உள்ள நந்தி பகவானுக்கு 18 வகையான அபிஷேகங்கள் நடைபெற்றன திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# வைத்தீஸ்வரன் கோவிலில் மே தின பொதுக்கூட்டம் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் சார்பில் நடந்தது



சீர்காழி, மே, 5 -
மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அருகே வைத்தீஸ்வரன் கோவில் மேல வீதியில் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் சார்பில் மே தின பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் பொன்.பாரிவள்ளல் தலைமை தாங்கினார். மாநில மாணவரணி துணை செயலாளர் சுதாகர், மாவட்ட துணை செயலாளர் சிவா, அவைத் தலைவர் சாதிக் பாஷா, இணை செயலாளர் அமுதவல்லி, துணை செயலாளர் சாந்தி, பொருளாளர் பாரதிராஜா, பொதுக்குழு உறுப்பினர் பூம்புகார் நேரு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மாவட்ட செயலாளர் பாரிவள்ளல், பேசுகையில், தமிழக முதல்வர் பொய்யான தேர்தல் வாக்குறுதியை கொடுத்து வெற்றி பெற்றுள்ளார். இவர் வெற்றி பெற்று இதுவரையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஆயிரம் வழங்கவில்லை. பெட்ரோல், டீசல், கேஸ் விலையை குறைக்கவில்லை. மாறாக புரட்சித்தலைவி கொண்டு வந்த மாணவர்களுக்கு மடிக்கணினி, தாலிக்கு தங்கம், அம்மா மினி கிளினிக், திருமண உதவித்தொகை உள்ளிட்ட திட்டங்களை ரத்து செய்து திமுக எந்தெந்த திட்டங்களில் கொள்ளையடிக்க முடியுமோ அந்தந்த திட்டங்களை செயல்படுத்தி வருகின்றனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழக மக்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றனர். ஆனால் திமுக குடும்பத்தினர் சொத்துக்களை தினம் தினம் வாங்கி குவித்து வருகின்றனர்.இதைபோல் எடப்பாடி பழனிச்சாமி சின்னம்மாவிடம் பதவியை பெற்று இன்று சின்னம்மாவை யார் என்று கூறி வருகிறார் என்று பேசினார்.

இந்த கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் அசோகன், சரவணன், புகழேந்தி, பரமேஸ்வரன், மோகன், ராமகிருஷ்ணன், தங்கராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அரியலூரில் நடைபெற்ற ஏழாவது புத்தகத் திருவிழா நிறைவடைந்தது



அரியலூர், மே.5-
அரியலூரில் நடைபெற்ற ஏழாவது புத்தகத் திருவிழா நிறைவடைந்தது இது பற்றி அரியலூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை வெளியிட்ட, செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் புத்தகத் திருவிழா நடத்த உத்தரவிட்டு அதற்கென நிதி ஒதுக்கீடு செய்துள்ளார், அந்த வகையில் இந்த ஆண்டு அரியலூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில், அரியலூர் மாவட்ட நிர்வாகம், தமிழ்ப்பண்பாட்டுப் பேரமைப்பு மற்றும் தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் இணைந்து நடத்திய 7-வது புத்தகத் திருவிழாவினை போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் கடந்த ஏப்ரல் 23 அன்று துவக்கி வைத்தார். இந்த புத்தகத் திருவிழா 23.04.2023 ஞாயிற்றுகிழமை முதல் 03.05.2023 புதன்கிழமை வரை 11 நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது.

புத்தகத் திருவிழாவின் 11-ம் நாள் மாலை. ஈரோடு மகேஷ் நட்சத்திரப் பேச்சாளராக கலந்து கொண்டு, சிந்தனை செய் மனமே என்ற தலைப்பில் பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார், அதை.தொடர்ந்து,புத்தகத் திருவிழா நடைபெற்ற நாட்களில், பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திய துறை அலுவலர்களுக்கும், தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்க நிர்வாகிகளுக்கும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த புத்தகத் திருவிழாவில், உள்ளூர் மற்றும் வெளியூரை சேர்ந்த பல்வேறு பிரபலமான புத்தகப் பதிப்பகங்களின் விற்பனையகங்கள் மற்றும் அரசுத் துறைகளின் கண்காட்சி அரங்குகள் என, மொத்தம் 80 கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது. சுமார் 40,000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் பள்ளி கல்லூரி மாணவ, மாணவியர்கள், வாசகர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் வருகைதந்து, தங்களுக்கு தேவையான புத்தகங்களை வாங்கிச் சென்றனர். அந்த வகையில் அரியலூரில் கடந்த 11 நாட்களாக நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் பொதுமக்கள், வாசகர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் தங்களுக்கு தேவையான புத்தகங்களை வாங்கியதன் மூலம் சுமார் 45 லட்ச ரூபாய் மதிப்பிலான புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி, அரியலூரில் நடைபெற்ற 7-வது புத்தகத் திருவிழாவினை சிறப்பாக நடத்தி முடிக்க, உரிய வழிகாட்டுதல்களை வழங்கிய போக்குவரத்துத்துறை அமைச்சர்,

புத்தகத் திருவிழாவினை சிறப்பாக நடத்திய தமிழ்ப்பண்பாட்டுப் பேரமைப்பு மற்றும் தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்திற்கும், விழா நடைபெற நிதியுதவி வழங்கிய நன்கொடையாளர்களுக்கும், புத்தகத் திருவிழா வெற்றிபெற சிறப்பாக பணியாற்றிய அனைத்துத் துறை அலுவலர்களுக்கும், பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர், வாசகர்கள் உள்ளிட்ட அனைவருக்கும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.ரமண சரஸ்வதி, தெரிவித்துள்ளார்.

# பெருங்களூர் பிடாரியம்மன் கோயிலில் மது எடுப்பு திருவிழா



ஆதனக்கோட்டை, மே.5-
பெருங்களூர் பிடாரியம்மன் கோயில் மது எடுப்புதிருவிழா கோலாகலமாக நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம்பெருங்களூரில் அருள்பாலித்துவரும் பிடாரியம்மனுக்கு நடைபெற்ற மது எடுப்புத் திருவிழாவில்பெருங்களூர், மட்டையன்பட்டி,வெள்ள வெட்டான்விடுதி, போரம் பாப்பாவயல் நெம்மேலிப்பட்டி காட்டுப்பட்டிமாந்தாங்குடி டி.களபம் மூக்கம்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களைச்சேர்ந்த திரளான பக்தர்கள் விரதமிருந்து தங்களது இல்லங்களில் சிறிய குடத்தில் நெல்மணிகள் போட்டு தென்னம்பாளையை செருகி மல்லிகைப்பூ சுற்றி பால்மது, சர்க்கரை மது, பல்வேறு மூலிகைகளைக்கொண்டு தயார் செய்த கள்மது என மூன்று வகையான மதுக்களை தலையில் சுமந்தபடி பக்தர்கள் தங்களது கிராமங்களில் இருந்து தாரை தப்பட்டை சென்டை மேளம் முழங்க ஆட்டம் பாட்டத்துடன் வந்து பெருங்களூர் பிடாரியம்மன் கோவிலை சுற்றி வலம் வந்து பிடாரியம்மனுக்கு மதுவை செலுத்தி தங்களது நேர்த்திக்கடன் நிறைவேற வேண்டி அம்மனை வழிபட்டனர்.

இந்தமது திருவிழாவில் பெங்களூர் சுற்றுவட்டார பல்வேறு கிராமங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர், இரவு ஆடல் பாடல் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.







▶ புதுக்கோட்டை திருகோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளிக்கு அங்கீகார புதுப்பித்தல் ஆணையை தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பள்ளியின் முதல்வரும் தாளாளருமான கவிஞர் தங்கம்மூர்த்தியிடம் வழங்கினார்.

# மணமேல்குடியில் ஸ்ரீ நந்தனவிநாயகர், அய்யனார் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம்

ஆவுடையார்கோவில், மே.5-

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி தாலுகா நாட்டாணி ஸ்ரீ நந்தனவிநாயகர், ஸ்ரீ பூரண புஷ்கல அம்பிகை சமேதஸ்ரீ சதுரமுடைய அய்யனார் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

மணமேல்குடி தாலுகா நாட்டாணி கிராமத்தில் அமைந்து அருள்பாலித்து வரும் ஸ்ரீ நந்தனவிநாயகர்,ஸ்ரீ பூரண புஷ்கல அம்பிகை சமேதஸ்ரீ சதுர முடைய அய்யனார் ஆலயத்தில் திருப்பணிகள் முடிவுற்று கும்பாபிஷேகம் நடத்துவதென அந்த கிராமத்தார்களால் முடிவு செய்யப்பட்டது. இதற்காக சிறந்த யாகசாலை அமைத்து கடந்த 02ம் தேதி கணபதி



ஹோமத்துடன் விழா தொடங்கியது. அதனை தொடர்ந்து3நாட்களாக 4கால யாக பூஜை நடைபெற்று வந்தது. விழாவின் முக்கிய நிகழ்வாக நேற்று பல்வேறு பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பெற்று பூஜிக்கப்பட்ட புனித நீரோடு கடம்புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது.

அதனை தொடர்ந்து சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது, கும்பாபிஷேகத்தைக் காண திரண்டிருந்த அப்பகுதியை சுற்றியுள்ள கிராம மக்கள், ஆன்மீக மெய்யன்பர்கள் சாமி அருள் பெற்றுச் சென்றனர், அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# ஜல்லிக்கட்டு போட்டியில் காயமடைந்த விஜயபாஸ்கரின் கருப்புக் கொம்பன் காளை பரிதாபமாக உயிரிழந்தது

அன்னவாசல் , மே.5-

அதிமுக முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரின் கொம்பன் காளைகள் வாடிவாசல்களில் அடுத்தடுத்து அடிபட்டு இறப்பதால் அவரது குடும்பமே சோகத்தில் உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்ற உறுப்பினர் விஜயபாஸ்கருக்கு ஜல்லிக்கட்டு காளைகள் வளர்ப்பதில் அதிக ஆர்வம். தனது வீட்டிற்கு வந்த கொம்பன் காளை பெயரையும் புகழையும் பெற்றுத் தந்தது. ஆனால், சில ஆண்டுகளில் தென்னலூர் ஜல்லிக்கட்டில் வாடிவாசலில் ஆக்ரோசமாக வெளிவந்த கொம்பன் தடுப்புக் கட்டையில் மோதி அதே இடத்தில் பலியானது. அதன்பிறகு வெள்ளைக்கொம்பன், சின்னக்கொம்பன், கருப்புக் கொம்பன் என பல காளைகள் வந்தது.

மே 2ம் தேதியான செவ்வாய்கிழமை வடசேரிப்பட்டியில் ஜல்லிக்கட்டு நடைபெற்றது. இதில், முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் கலந்து கொண்டு பார்வையாளர்



மாடத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தார். இந்த ஜல்லிக்கட்டில் அவரது கருப்புக் கொம்பன் காளையும் பங்கேற்றது. அப்போது, "முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரின் கருப்புக் கொம்பன் வருது முடிஞ்சா புடிச்சுப் பார், தொட்டுப் பார்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே ரோஜாப்பூ மாலையுடன் ஆக்ரோசமாக வெளியே வந்த போது பழைய கொம்பனைப் போலவே கருப்புக் கொம்பனும் தடுப்புக் கட்டையில் மோதி சரிந்தது. அங்கு நின்ற போலீசார் மற்றும் காளையுடன் வந்தவர்கள் காளையை மீட்டு ஒரத்தநாடு கால்நடை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். 2 நாட்கள் வரை தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும் சிகிச்சை பலனின்றி கருப்புக் கொம்பன் பரிதாபமாக உயிரிழந்தது. விஜயபாஸ்கர் உட்பட குடும்பமே தாங்கள் ஆசையாக அன்பாக வளர்த்த கருப்புக் கொம்பனுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். அடுத்தடுத்து காளைகள் வாடிவாசலில் மோதி உயிரிழக்கும் சம்பவம் அவரது குடும்பத்தில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கறம்பக்குடி அருகே மழையூர் அகத்தீஸ்வரர் ஆலய சித்ரா பௌர்ணமி திருவிழா

கறம்பக்குடி, மே.05-

கறம்பக்குடி அருகே மழையூரில் அகத்தீஸ்வரர் பெரியநாயகி அம்பாள் ஆலய சித்ரா பௌர்ணமி திருவிழா நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா மழையூர் அகத்தீஸ்வரர் பெரியநாயகி அம்பாள் சித்ரா பௌர்ணமி திருவிழா கடந்த வாரம் காப்பு கட்டுதலுடன் துவங்கியது. தினமும் மண்டகப் படிதாரர்களால் சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெற்றது. விழாவின் முக்கிய நிகழ்வான திருவிழா நேற்று நடைபெற்றது.

காலை முதலே திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்,



மாலையில் காவடி பால்குடம் ஆகியவற்றை பக்தர்கள் ஊர்வலமாக எடுத்து வந்து கோவில் முன்பாக அக்னியில் இறங்கி தங்கள் நேர்த்தி கடனை செலுத்தினர், சுவாமி தரிசனம் செய்த பக்தர்களுக்கு மதியம் அன்னதானம் வழங்கப்பட்டது. சுவாமிகளுக்கு குருக்கள் அம்பாசங்கர், மணிகண்டன் ஆகியோர் அபிஷேக ஆராதனைகளை செய்தனர், விழா ஏற்பாடுகளை கிராம பொதுமக்கள் செய்திருந்தனர், இரவு அரசுமற்றும்பொதுத்துறை ஊழியர்கள் சார்பாக கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

# தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வுக்கு தனித்தேர்வர்கள் விண்ணப்பிக்கலாம்

புதுக்கோட்டை, மே.5-

மாவட்டத்தில் தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வுக்கு தனித்தேர்வர்கள் விண்ணப்பிக்கலாம் என புதுக்கோட்டை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் பெ. நடராஜன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

தேர்வுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள் வருகிற மே 9ம் தேதி முதல் மே 13ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். இதனை www.dge.tn.gov.in என்ற இணையதளம் வழியாக மட்டும். விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, புதுக்கோட்டை, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வாயிலாக ஏற்கனவே தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற சான்றிதழ்களின் நகல்களை இணைத்து வெப்கேமரா புகைப்படம் மூலம் விண்ணப்பங்களை தேர்வு கட்டணத்துடன் பதிவேற்றம் செய்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பாடத்திற்கும் ரூபாய் 50,



மதிப்பெண் சான்றிதழ் கட்டணம்ரூபாய்100,பதிவு மற்றும் சேவை கட்டணம் ரூபாய் 15, ஆன்லைன் பதிவு கட்டணம் ரூபாய் 70 செலுத்துமாறு தேர்வர்களை கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். தேர்வு கட்டணம் மற்றும் விண்ணப்பம் பதிவேற்ற செய்ய மே 9ம் முதல் மே 13ம் தேதி வரை காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை புதுக்கோட்டை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் விண்ணப்பிக்க வேண்டும் எனவும், மேற்கண்ட தேதிகளில் விண்ணப்பிக்காத தேர்வர்கள் ரூபாய் 1000 கூடுதல் கட்டணம் செலுத்தி சிறப்பு அனுமதி திட்டத்தில் மே 15ம் தேதி முதல் மே 16ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் எனவும் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# புதுக்கோட்டை ஸ்ரீ ஆஞ்சநேயர் கோயிலில் ஸ்ரீ நரசிம்மர் ஜெயந்தி விழா சிறப்பு வழிபாடு



புதுக்கோட்டை , மே.5-

புதுக்கோட்டை அனுமன் திருச்சபை சார்பில் ஸ்ரீ ஆஞ்சநேயர் கோயிலில் ஸ்ரீ நரசிம்மர் ஜெயந்தி விழா சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

புதுக்கோட்டைதெற்கு 4 -ஆம் வீதி மார்க்கெட் பகுதியில்உள்ளஇந்துசமய அறநிலையத்துறையை சேர்ந்த ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்கோவிலில் அனுமன் திருச்சபை சார்பில் ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தி வைபவ பூஜை சிறப்பாக நடைபெற்றது.ஸ்ரீநரசிம்மர், லெட்சுமிநரசிம்மர் மலர் அலங்காரம் செய்யப்பட்டு இளநீர், நொங்கு மற்றும் பழங்கள் வைத்து பூஜைகள் நடந்தது. பின்னர் கே.மணிகுருக்கள் தலைமையில் மகா தீபாராதனை நடைபெற்றது. மகா விஷ்ணுவின் தசாவதாரங்களில் 4 -ஆவது அவதாரம் தான் நரசிம்ம அவதாரம். பக்தி சொற்பழிவு இசை கச்சேரியும் நடந்தன. நிகழ்ச்சியில்பக்தர்கள் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை அனுமன் திருச்சபையினர் ஆன்மிக நெறியாளர் ஆனந்த் தலைமையில் நிர்வாகிகள் செய்திருந்தனர்.இதில், ஆன்மீக அன்பர் உள்பட திரளான பக்தர்கள் பங்கேற்றனர். அனைவருக்கும் இளநீர், நொங்கு மற்றும் பழங்கள் அருட்பிரசாதம் வழங்கப்பட்டது.

# சர்வதேச தொழிலாளர்கள் தினத்தை முன்னிட்டு மணவளான்கரையில் கிராமசபை கூட்டம்



திருமயம் , மே.5-

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் ஊராட்சி ஒன்றியம் திருமயம் ஊராட்சிக்கு உட்பட்ட மணவாளான்கரை கிராமத்தில் சர்வதேச தொழிலாளர்கள் தினத்தை முன்னிட்டு ஊராட்சி மன்ற தலைவர் சிக்கந்தர் தலைமையில் நடைபெற்றது.

மற்றும் திமுக முன்னாள் ஒன்றிய செயலாளரும் திருமயம் கூட்டுறவு வங்கி தலைவர் எம்.பி. சரவணன், ரெவன்யூ இன்ஸ்பெக்டர், கிராம நிர்வாக அலுவலர் கலந்துகொண்டு கிராம சபா கூட்டம் தொடங்கப்பட்டது. ஊராட்சி மன்ற தலைவர் ஊராட்சிக்கு செய்யப்பட்ட வேலைகளையும் வார்டு வாரியாக எடுத்துக் கூறினார். ஒவ்வொரு பணிக்கும் எவ்வளவு செலவு செய்யப்பட்டது என விரிவாக பேசினார் பொதுமக்கள் கொடுத்த மனுக்களுக்கும் பொதுமக்கள் கேட்ட கேள்விகளுக்கும் ஊராட்சி மன்ற தலைவர் முறையாக பதில் அளித்தார் இனிமேல் செய்ய போகும் வேலைகளுக்கும் பொதுமக்கள் இடத்தில் விளக்கம் கூறினார் மேலும் ஊராட்சிமன்றஉறுப்பினர்கள் ஊராட்சி எழுத்தர் ஊராட்சியில் பணி செய்யும் பணியாளர்கள் ஊராட்சிக்கு உட்பட்ட கிராமங்களில் இருந்து வருகை தந்த பொதுமக்கள் கிராம சபா கூட்டத்தில் சிறப்பாக கலந்து கொண்டனர்.

அரிமளத்தில் சிவன் கோவில் சித்திரை திருவிழா தேரோட்டம்

# திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர்

அரிமளம், மே.5-

புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் சிவன் கோவில் சித்திரை திருவிழாதேரோட்டத்தில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம்பிடித்துஇழுத்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலுகா அரிமளம் சிவன் கோயில் 12 நாள் சித்திரை திருவிழா கடந்த 24ம் தேதி காப்பு கட்டுதல், கொடியேற்றத்துடன் தொடங்கியது. அதனை தொடர்ந்து ஒவ்வொரு நாளும் வித விதமான ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் பஞ்சமூர்த்திகளின் வீதி உலா நடந்தது. இந்நிலையில் கோயில் வளாகத்தில் உள்ள திருக்கல்யாண மண்டபத்தில் சுந்தரேஷ்வரர், மீனாட்சி அம்மனுக்கு திருக்கல்யாண நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இதனை தொடார்ந்து 9ம் திருவிழாவை முன்னிட்டு விழாவின்



முக்கிய நிகழ்வான தேர்த் திருவழா நடைபெற்றது, இதையொட்டி விநாயகர், சுப்பிரமணியர் - வள்ளி-தெய்வானை, சுந்தரேஷ்வரர், மீனாட்சி அம்மன், சண்டீகேஷ்வரர் ஆகிய பஞ்ச மூர்த்திகளுக்கு தனித்தனியே அலங்கரிப்பட்ட தேரில் வைத்து அபிஷேக, ஆராதனை நடத்தப்பட்டது.

இதனை தொடர்ந்து பஞ்சமூர்த்திகள் உள்ள ஐந்து தேர்களையும் பக்தர்கள் வடம் பிடித்து இழுத்துச் சென்றனர், தேரானது சிவன் கோயில் தேரடியில் இருந்து புறப்பட்டு சிவன் கொயில் ஊரணி, கடை வீதி, காவல் நிலையம் வழியாக வந்து பின் தேரடியை அடைந்தது. பஞ்சமூர்த்திகள் தனித்தனித் தேர்களில் ஒன்றன் பின் ஒன்றாக வந்தது கண்கொள்ளா காட்சியாக இருந்தது. இதில் அரிமளம் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர், விழாவிற்கான ஏற்பாடுகளை நகரத்தார்கள் மற்றும் அரிமளம் ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர்.

# பொன்னமராவதி அருகே ஸ்ரீ பரியாமருதீஸ்வரர் கோவிலில் மகா கும்பாபிஷேக விழா

பொன்னமராவதி, மே.5-

பொன்னமராவதி அருகாமையில் அமைந்திருக்கும் சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர் ஸ்ரீமத் முத்து விஜயரகுநாத கௌரிவல்லப மேதகு ராணி டி.எஸ். கே.மதுராந்தகி நாச்சியாரின் நிர்வாகத்திற்கு உட்பட்ட நெற்குப்பை சேகாரம் ஸ்ரீ பரியாமருதீஸ்வரர் கோவில் அமைப்பு பணி நடைபெற்று, நேற்று மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் கலந்துகொண்டனர்.

விழாவில் திங்கட்கிழமை கணபதி ஹோமம் நடைபெற்றது, வாஸ்து பூஜை நடைபெற்றது , செவ்வாய்க்கிழமை ஒன்றாம் காலயாகசாலை பூஜைகள், புதன்கிழமை இரண்டாம் கால யாகசாலை பூஜைகள் அன்று மாலை 5 மணிக்கு மூன்றாம் கால



யாகசாலை பூஜைகள் தொடர்ந்து நேற்று காலை 5 மணிக்கு 4 ம் காலம் யாகசாலை பூர்ணாகுதி தீபாராதனை கடம் புறப்பாடு மற்றும் மகா மூலவர் கும்பாபிஷேக விழா ஏராளமான பக்த கோடுகள் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் நாட்டார்கள், நகரத்தார்கள் நெற்குப்பையை சேர்ந்த முரு. பழ.முரு. குடும்பத்தினரால் கட்டப்பட்ட ஸ்ரீ பரியாமருதீஸ்வரர் கோவில் கும்பாபிஷேகம் விழா பக்த கோடுகள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது, இதில் நாட்டார்கள், நகரத்தார்கள் மேல நெற்குப்பை நாட்டார்கள், ஐந்து பட்டி ஊரார்கள், பேட்டையார்கள், தொழிலாளர்கள், ஜானிகர்கள், சுற்றியுள்ள பக்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மே 8 ஆம் தேதி வருகிறது புயல் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை

சென்னை , மே.5-

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவக்கூடும். இது காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று வடக்கு திசையில் நகர்ந்து மத்திய வங்கக்கடல் பகுதிகளில் புயலாக வலுபெறக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியிட்ட செய்திக்குறிப்பில், தென் இந்திய பகுதிகளின் மேல் வளி மண்டலத்தின் கீழடுக்குகளில் கிழக்கு திசை காற்றும், மேற்கு திசை காற்றும் சந்திக்கும் பகுதி நிலவுகிறது. தமிழக கடலோரப்பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. மேலும், தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் வருகின்ற 6-ஆம் தேதி வாக்கில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவக்கூடும். இதன் காரணமாக அப்பகுதிகளில் 7-ஆம் தேதி வாக்கில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும். இது 8-ஆம் தேதி வாக்கில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று வடக்கு திசையில் நகர்ந்து மத்திய வங்கக்கடல் பகுதிகளில் புயலாக வலுபெறக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் தொடர்ந்து, அடுத்த 4 நாட்களுக்கு தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை பொருத்தவரை, அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 35-36 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26-27 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும்.

மேலும், மீனவர்களுக்கான எச்சரிக்கை செய்தியையும் வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது. மே 4 ஆம் தேதி, குமரிக்கடல் பகுதிகள், கேரள கடலோரப்பகுதிகள், லட்சத்தீவு பகுதிகள் மற்றும் இலங்கையை ஒட்டிய தென் மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

மே 7 ஆம் தேதி அன்று தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். காற்றின் வேகம் சற்றே உயர்ந்து தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் மே 8 ஆம் தேதி அன்று இரவிலிருந்து மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 70 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். காற்றின் வேகம் மேலும் உயர்ந்து தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்திய வங்கக்கடல் பகுதிகளில் 10.05.2023 முதல் மணிக்கு 60 முதல் 70 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 80 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்த பட்டுள்ளனர். ஆழ் கடலிலுள்ள மீனவர்கள் மே 7 ஆம் தேதிக்குள் கரைக்கு திரும்புமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# வேட்புமனுவில் தவறான தகவல் இபிஎஸ் மீது வழக்கு பதிவு

# அரியலூரில் நடைபெற்று வந்த புத்தகத் திருவிழா நிறைவுபெற்றது







# தென்பெண்ணை : தேவைப்பட்டால் மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்கு செல்வோம்

சென்னை / புதுக்கோட்டை | 05.05.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

05.05.2023 வெள்ளி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

பிரிட்டிலடா வதேதர் , இந்திய செயற்பாட்டாளர் (பி.1911) (இ.1932)



ஜெயில் சிங் , இந்தியாவின் 7வது குடியரசுத் தலைவர் (பி.1916) (இ.1987)



பி. யு. சின்னப்பா , தமிழக நாடக, திரைப்பட நடிகர், பாடகர் (பி.1916) (இ.1951)



## இன்றைய நினைவு நாள்

ஆர். கே. சண்முகம் , இந்தியப் பொருளாதார நிபுணர் (பி.1892) (இ.1953)



தேவன் , தமிழக நகைச்சுவை எழுத்தாளர் (பி.1896) (இ.1972)



இராய் படையாச்சி , தென்னாப்பிரிக்க அரசியல்வாதி (பி.1902) (இ.1997)



## வணிகர் தினம்

## பன்னாட்டு மருத்துவச்சிகள் நாள்